சுருக்கம்

பணியமைப்பு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – 27 துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (சத்துணவு) பணியிடங்களை புதியதாக தோற்றுவித்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ.5) துறை

அரசாணை (நிலை) எண்.2

நாள்: 04.01.2016
மன்மத, மார்கழி 19
திருவள்ளுர் ஆண்டு 2046
படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண். 2119, சமூக நலத் (ச.ந.VI) துறை, நாள் 4.11.1987.
2. அரசாணை (வாலாயம்) எண். 4, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ4) துறை, நாள் 04.01.1989.
3. அரசாணை (நிலை) எண். 693, சமூக நலத் துறை, நாள் 8.8.1989.
4. அரசாணை (டி) எண்.624, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை, நாள் 07.12.2010.
5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித எண். 56656/2007/எப்1, நாள் 09.03.2011 மற்றும் 10.07.2013.

* * * * *

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 12 ஊராட்சி ஒன்றியங்களில் முதலமைச்சர் சத்துணவு திட்டத்தினை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்துடன் (Integrated Child Development Scheme) 01.12.87 முதல் இணைக்க உத்திரவிடப்பட்டது. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கீழ்க்கண்ட 12 ஊராட்சி ஒன்றியங்களில் விரிவாக்க அலுவலர் / மேலாளர் நிலையிலான கணக்கர் (சத்துணவு) (தற்போதைய துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (சத்துணவு)) பணியிடங்கள் கலைக்கப்பட்டன.

| | |
|---|---|
| 1) குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், படப்பை | – காஞ்சிபுரம் மாவட்டம். |
| 2) திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் | – காஞ்சிபுரம் மாவட்டம். |
| 3) சித்தாமூர் ஊராட்சி ஒன்றியம் | – காஞ்சிபுரம் மாவட்டம். |
| 4) லத்தூர் ஊராட்சி ஒன்றியம் | – காஞ்சிபுரம் மாவட்டம். |
| 5) மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியம் | – காஞ்சிபுரம் மாவட்டம். |
| 6) திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம் | – திருவள்ளூர் மாவட்டம். |
| 7) மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம் | – திருவள்ளூர் மாவட்டம். |
| 8) புழல் ஊராட்சி ஒன்றியம் | – திருவள்ளூர் மாவட்டம். |
| 9) இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியம் | – இராமநாதபுரம் மாவட்டம். |
| 10)போகலூர் ஊராட்சி ஒன்றியம் | – இராமநாதபுரம் மாவட்டம். |
| 11) விருதுநகர் ஊராட்சி ஒன்றியம் | – விருதுநகர் மாவட்டம். |
| 12) ஸ்ரீவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியம் | – விருதுநகர் மாவட்டம். |

2. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கீழ்க்கண்ட 9 ஊராட்சி ஒன்றியங்களில் முதலமைச்சர் சத்துணவு திட்டம் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்துடன் இணைக்கப்பட்டதால், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, விரிவாக்க அலுவலர் / மேலாளர் நிலையிலான கணக்கர் (சத்துணவு) (தற்போதைய துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (சத்துணவு)) பணியிடங்கள் கலைக்கப்பட்டன.

1) பெத்த நாய்க்கன் பாளையம் ஊராட்சி ஒன்றியம் – சேலம் மாவட்டம்
2) கெங்கவல்லி ஊராட்சி ஒன்றியம் – சேலம் மாவட்டம்
3) வடமதுரை ஊராட்சி ஒன்றியம் – திண்டுக்கல் மாவட்டம்
4) மாதனூர் ஊராட்சி ஒன்றியம் – வேலூர் மாவட்டம்
5) ஒட்டபிடாரம் ஊராட்சி ஒன்றியம் – தூத்துக்குடி மாவட்டம்
6) மொரப்பூர் ஊராட்சி ஒன்றியம் – தருமபுரி மாவட்டம்
7) ஒசூர் ஊராட்சி ஒன்றியம் – கிருஷ்ணகிரி மாவட்டம்
8) சாத்தூர் ஊராட்சி ஒன்றியம் – விருதுநகர் மாவட்டம்
9) பரமக்குடி ஊராட்சி ஒன்றியம் – இராமநாதபுரம் மாவட்டம்

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தனது கருத்துருவில், இத்திட்டம் மேற்கண்ட 21 ஊராட்சி ஒன்றியங்களில், சோதனை முறையில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்துடன் (ICDS) இணைக்கப்பட்டாலும், இத்திட்டம் மற்ற ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (வட்டார வளர்ச்சி) தலைமையின் கீழ் விரிவாக்க அலுவலர் (சத்துணவு) தற்போது துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (சத்துணவு) பணியிடங்கள் மூலம்தான் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. பின்பு இத்திட்டம், ஊரக வளர்ச்சி துறை மூலம் ஊராட்சி ஒன்றியங்களிலேயே தொடர்ந்து செயல்படுத்தலாம் என முடிவெடுக்கப்பட்டதன் விளைவாக, மேற்கண்ட 21 ஊராட்சி ஒன்றியங்களிலும் மீளவும் வட்டார வளர்ச்சி அலுவலர் மூலமாகவே செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் கலைக்கப்பட்ட 21 விரிவாக்க அலுவலர் (சத்துணவு) பணியிடங்கள், மீள தோற்றுவிக்கப்படாமல் கடந்த 21 ஆண்டுகளாக, மிகுந்த சிரமத்திற்கிடையே, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (நிர்வாகம்) மூலம் கூடுதல் பொறுப்பாக கவனித்து வரப்படுகிறது. ஆனால் மற்ற ஊராட்சி ஒன்றியங்களில் மட்டும் இதற்கென தொடர்ந்து துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (சத்துணவு) பணியிடம் மேலே 4–ல் படிக்கப்பட்ட அரசாணையின் மூலம் தொடர் அங்கீகாரம் அளிக்கப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது எனவும், மேலும் கீழ்கண்ட 6 ஊராட்சி ஒன்றியங்களில் ஊராட்சி ஒன்றியங்கள் உருவாக்கப்படும்போதே இந்த துணை வட்டார வளர்ச்சி (சத்துணவு) பணியிடங்கள் தோற்றுவிக்கப்படாமல் உள்ளது என்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

| | | |
|---|---|---|
| 1. | கல்வராயன் மலை ஊராட்சி ஒன்றியம் | விழுப்புரம் மாவட்டம் |
| 2. | ஜவ்வாது மலை ஊராட்சி ஒன்றியம் | திருவண்ணாமலை மாவட்டம் |
| 3. | ஏற்காடு ஊராட்சி ஒன்றியம் | சேலம் மாவட்டம் |
| 4. | தளி ஊராட்சி ஒன்றியம் | கிருஷ்ணகிரி மாவட்டம். |
| 5. | நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றியம் | நாகப்பட்டினம் மாவட்டம் |
| 6. | கொல்லிமலை ஊராட்சி ஒன்றியம் | நாமக்கல் மாவட்டம் |

4. மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தனது கருத்துருவில் 14 மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் 27 ஊராட்சி ஒன்றியங்களில் 917 கிராம ஊராட்சிகள் உள்ளன என்றும், 27 ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டின் கீழ் 2870 சத்துணவு மையங்கள் உள்ளன என்றும், அதில் ஒவ்வொரு பள்ளி சத்துணவு மையங்களுக்கும் அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் ஆகிய மூன்று பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர் என்றும், சத்துணவு பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குதல், பணிப்பதிவேடுகள் பராமரித்தல், ஓய்வூதிய பிரேரணைகள் தயாரித்தல், சிறப்பு சேமநல நிதித் தொகை வழங்குதல், தணிக்கைத் தடை நிவர்த்தி செய்தல், பயனாளிகளின் எண்ணிக்கை நியமனம் செய்தல், தளவாட சாமான்கள் வழங்குதல், சத்துணவு மையங்கள் பார்வையிடுதல் மற்றும் இதர பதிவேடுகள் பராமரித்தல், வங்கி கணக்குகளை ஒத்திசைவு செய்து பணியாளர்களுக்கு ஊதியம், ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் இதர படிகள் குறித்து பட்டியல்கள் தயார் செய்தல், மேலும் சத்துணவு திட்டத்திற்கான சத்துணவு முட்டைகளை, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (சத்துணவு) பள்ளி சத்துணவு மையங்களுக்கு அனுப்பும் பணியை மேற்கொண்டு வருகிறார் என்றும், இத்திட்டம் தொடர்பான அனைத்து இதர பணிகளையும் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (சத்துணவு) செய்து வருகின்றனர் என்பதால், இப்பணியிடங்கள் இல்லாத ஒன்றியங்களில் பிற துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊரக வளர்ச்சி சம்மந்தமான பணிகளுடன் (சத்துணவு) பணிகளையும் சேர்த்து கூடுதலாக கவனிக்கின்றனர். எனவே ஊராட்சி ஒன்றியங்களில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (சத்துணவு) பணியிடம் மிகவும் இன்றியமையாததாகிறது. மேலும், சத்துணவுத் திட்டத்தின் முக்கியத்துவம் மற்றும் செயல்படுத்துவதில் உள்ள சிரமங்களை கருத்தில் கொண்டு, கலைக்கப்பட்ட 21 துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (சத்துணவு) பணியிடங்கள் மற்றும் இப்பணியிடங்கள் உருவாக்கப்படாத 6 ஊராட்சி ஒன்றியங்களுக்கு 6 துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (சத்துணவு) பணியிடங்கள் ஆக மொத்தம் 27 துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (சத்துணவு) பணியிடங்கள் உருவாக்கி ஆணை வழங்கும்படியும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்தது. உரிய ஆய்வுக்குப்பின், கலைக்கப்பட்ட 21 துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (சத்துணவு) பணியிடங்கள் மற்றும் இப்பணியிடங்கள் உருவாக்கப்படாத 6 ஊராட்சி ஒன்றியங்களுக்கு 6 துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (சத்துணவு) பணியிடங்கள் ஆக மொத்தம் 27 துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (சத்துணவு) பணியிடங்களை ரூ.9300–34800+ரூ.4800/– தர ஊதியம் + ரூ.500 தனி ஊதியம் என்ற ஊதிய விகிதத்தில் கீழ்க்கண்ட மாவட்டங்களில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் தற்காலிக பணியிடங்களாகத் தோற்றுவித்து அரசு ஆணையிடுகிறது.

| வ.எண். | மாவட்டம் | ஊராட்சி ஒன்றியம் |
|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | |
| | | 1. குன்றத்தூர் |
| | | 2. திருப்போரூர் |
| | | 3. சித்தாமூர் |
| | | 4. லத்தூர் |
| | | 5. மதுராந்தகம் |

| | | |
|---|---|---|
| 2. | திருவள்ளூர் | 6. திருவள்ளூர் |
| | | 7. மீஞ்சூர் |
| | | 8. புழல் |
| 3. | இராமநாதபுரம் | 9. இராமநாதபுரம் |
| | | 10. பரமக்குடி |
| | | 11. போகலூர் |
| 4. | விருதுநகர் | 12. விருதுநகர் |
| | | 13. சாத்தூர் |
| | | 14. ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 5. | சேலம் | 15. பெத்தநாயக்கன் பாளையம் |
| | | 16. ஏற்காடு |
| | | 17. கெங்கவல்லி |
| 6. | திண்டுக்கல் | 18. வடமதுரை |
| 7. | வேலூர் | 19. மாதனூர் |
| 8. | தூத்துக்குடி | 20. ஒட்டபிடாரம் |
| 9. | தருமபுரி | 21. மொரப்பூர் |
| 10. | கிருஷ்ணகிரி | 22. ஒசூர் |
| | | 23. தளி |
| 11. | திருவண்ணாமலை | 24. ஜவ்வாது மலை |
| 12. | விழுப்புரம் | 25. கல்வராயன் மலை |
| 13. | நாகப்பட்டினம் | 26. நாகப்பட்டினம் |
| 14. | நாமக்கல் | 27. கொல்லிமலை |

6. மேலே பத்தி 5–ல் தோற்றுவிக்கப்பட்ட 27 தற்காலிகப் பணியிடங்களும், அப்பணியிடங்கள் நிரப்பப்பட்ட நாள் முதல் ஓராண்டுக்கு தொடர அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், அப்பணியிடங்களில் நிரப்பப்படும் பணியாளர்கள் நடைமுறை விதிகளின்படி ஊதியம் மற்றும் பிறப் படிகள் பெறத் தகுதியுடையவராவர்.

7. மேலே பத்தி 5–ல் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களுக்கான செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:–

"2515 – 00 ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் – 001 நெறிபடுத்தலும் நிருவாகமும் – I திட்டத்தில் சேராதது – AA ஊரக வளர்ச்சி இயக்ககம் – 01 சம்பளங்கள்"

(ததொகு 2515 00 001 AA 0100)

8. இச்செலவினம் ஒரு புது துணைப் பணி குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இதற்கான செலவினத்தை முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணமாகப் பெற்று செலவிடப்படலாம். இதற்கான ஆணை நிதி (வ.செ.பொ.1) துறையில் தனியாக வெளியிடப்படும். எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து தேவையான முன்பணம் பெற வரையறுக்கப்பட்ட படிவத்தில் உரிய விவரங்களுடன் இவ்வரசாணையின் நகலையும் இணைத்து நிதி (வ.செ.பொ.1) துறைக்கு அனுப்பி வைக்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இக்கூடுதல் செலவினத்திற்கான

கருத்துருவை 2015-2016ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் சேர்ப்பதற்கு ஏதுவாக உரிய விளக்கக் குறிப்பினை நிதி (ஊ.வ.) துறைக்கு அனுப்பி வைக்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வரசாணை நிதித் துறையின் அ.சா.எண்.152/Fin.(CMPC)/2016, நாள் 04.01.2016 இசைவுடன் ஆணை வெளியிடப்படுகிறது மற்றும் இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1786 (ஆயிரத்து எழுநூற்று எண்பத்தாறு).

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி,
அரசு செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை – 15.
மாவட்ட ஆட்சித் தலைவர், காஞ்சிபுரம் / திருவள்ளூர்/ இராமநாதபுரம்/ விருதுநகர்/சேலம்/திண்டுக்கல்/வேலூர்/தூத்துக்குடி/தருமபுரி/ கிருஷ்ணகிரி/திருவண்ணாமலை/விழுப்புரம்/நாகப்பட்டினம்/நாமக்கல் மாவட்டம்.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, சென்னை-108.
இயக்குநர், கருவூலம் மற்றும் கணக்குகள் துறை, சென்னை-15.
மாநில கணக்காயர், சென்னை-18/35
மாவட்ட கருவூல அலுவலர், காஞ்சிபுரம் / திருவள்ளூர்/ இராமநாதபுரம்/ விருதுநகர்/சேலம்/திண்டுக்கல்/வேலூர்/தூத்துக்குடி/தருமபுரி/ கிருஷ்ணகிரி/திருவண்ணாமலை/விழுப்புரம்/நாகப்பட்டினம்/நாமக்கல் மாவட்டம்.

நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை செயலாளர் அவர்களின் முதன்மைச் தனிச் செயலாளர், சென்னை-9.
நிதித் (ஊ.வ. / வ.செ.பொ.I / வ.செ.பொ.II / (CMPC) ) துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு/ உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
4/1/16